பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 04 புதன்கிழமை 21.09.2022 கதிர் 318

### இது ரகசியம் அல்ல!

மகாராணியில் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றுவதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் அந்தப் பயணத்தை ஒட்டி சில சமூக ஊடகங்களுடன் சேர்ந்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வதந்திப் பிரச்சாரத்தை

☞2

# உள்ளூராட்சித் தேர்தலைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் இப்போது தேர்தல் ஆணையத்திடம்!

## ஆனால் நவம்பர் 11 ஆம் திகதிக்குப் பின்னர் அதைச் செய்ய முடிவாம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.21

செப்டம்பர் 20ஆம் திகதியில் இருந்து உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான பிரகடனத்தை தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடமுடியும். ஆனால் புதிய வாக்காளர்களை கருத்திற்கொண்டு நவம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சிமன்ற தேர்தலைப் பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவிருக்கின்றோம் என இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பிலான

☞2



## தேர்தல் விவகாரம் குறித்து யாழ் செயலகத்தில் ஆராய்வு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.21

இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பிலான

☞2

## லஸந்தவின் படுகொலையில் இலங்கை அரசே குற்றவாளி!

### நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் ஹேக்கில் தீர்ப்பு



பத்திரிகையாளர் லஸந்த படுகொலையில் இலங்கை அரசு குற்றவாளி என்று ஹேக்கில் உள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் அந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் விசாரணை நடத்தி வந்தது.

இலங்கை அரசுக்கும் அது அழைப்பாணை

☞2

# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு அதிகாரப் பகிர்வு குறித்தும் கவனம்

## பிரிட்டன் வாழ் புலம்பெயர் இலங்கையர்களுடனான சந்திப்பில் ரணில் தெரிவிப்பு







லண்டன்,செப்ரெம்பர்21

வடக்கில் தமிழ் மக்களின் காணிப் பிரச்சினை, காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினை ஆகியவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். அதிகாரப் பகிர்வின் சில அடிப்படைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு பிரிட்டன் வாழ் இலங்கையர்கள் முன்னிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

☞9

## தேசிய பேரவையை அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தேசிய பேரவை என்று பெயரிடப்பட்ட நாடாளுமன்றக் குழுவை அமைப்பதற்கான தீர்மானம், வாக்கெடுப்பின்றி நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதையடுத்து அது தொடர்பான விவாதம் இடம்பெற்றிருந்தது.

## தியாகி திலீபனின் ஊர்திப் பவனிக்கு போக்குவரத்துப் பொலிஸார் இடையூறு





(வவுனியா நிருபர்)

வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற தியாக தீபம் திலீபனின் ஊர்திப் பவனிக்குப் போக்குவரத்துப் பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள்

☞2

# குருந்தூர் மலையில் பறிபோகுமா தமிழர்களின் காணிகள்? அளவீடு செய்யும் பணியை நிறுத்துமாறு அமைச்சர் உத்தரவு

## தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரின் சுயரூபம் இன்று தெரியவரும்

குருந்தூர் மலையில் தமிழர்களுக்குச் சொந்தமான 612 ஏக்கர் காணிகளை இன்று புதன்கிழமை அளவீடு செய்யத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எடுத்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கின்றனர் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு சீறியுள்ளது.

"ஜனாதிபதி, அவரது இரண்டு அதிகாரிகள் மற்றும் அவரது டாக்டர் ஆகியோரே ஜனாதிபதியின் பயண அணியில் இடம் பெற்றுள்ளனர். ஜனாதிபதியின் துணைவியார் தனது சொந்தச் செலவில் பயணத்தில் இணைந்துள்ளார்.

'அதேசமயம் தனது சொந்தப் பயணமாக லண்டன் சென்றுள்ள ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் ரூவான் விஜேவர்தனா, நேற்று முன்தினம் புலம்பெயர் இலங்கையருடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் கலந்து கொண்டார்' - என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதியுடன் அவரது தனிப்பட்ட செயலாளர், சர்வதேசவிவகாரங்களுக்கான இயக்குனர் தனுஷ் கொலம்பகே மற்றும் அவரது மருத்துவர் ஆகியோரே உத்தியோகபூர்வ பயண அணியில் இடம் பெற்றுள்ளனர் என்று தெளிவுபடுத்தப்பட்டது.

முன்னர் ராஜபக்ஷக்களின் காலத்தில் இப்படி ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணம் என்றால் நாட்டின் செலவில் ஒரு பட்டாளமே விமானம் நிறையப் பயணிக்கும். அதைத்தான் ரணிலும் செய்திருப்பார் என்று எண்ணியோர் இந்தப் புரளியை கிளப்பி விட்டிருப்பர்.

ரணில் தேர்ந்த நரித் தந்திர அரசியல்வாதி. தனது அடிகளை மிகக் கவனமாகத்தான் எடுத்து வைக்கின்றார். அதுவும் இந்தச் சமயத்தில் அவரது நடவடிக்கை ஒன்றுக்கு இரண்டு தடவை எச்சரிக்கையாகத் தான் உள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் முழு அமைச்சரவையும் நியமிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

முக்கிய அமைச்சர்கள் முன்னர் வகித்த அமைச்சுப் பதவிகளையே மீண்டும் பெற்றுக் கொள்வார்கள் எனத் தெரிவித்த அவர், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சுப் பதவியைத் தான் வெற்றிகரமாக முன்னெடுத்தமையால், தனக்கும் அதே அமைச்சுப் பதவி மீளக் கிடைக்க வாய்ப்புள்ளதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார். எல்லாம் நப்பாசைதான்....!

ஆக, ரணில் கொழும்பு வந்து இறங்கிய பின்னர் புதிய அமைச்சரவை நியமனம் என்பதால் ஓர் அரசியல் பிரளயத்திற்கு களை கட்டுகின்றது என்றுதான் தோன்றுகின்றது.

இதற்கிடையில் புதுடெல்லிக்கான இலங்கைத் தூதர் மிலிந்த மொறகொட இலங்கையின் சீன மற்றும் இந்திய உறவுப் போக்குக் குறித்து ஒரு குறியீட்டு கருத்துரையை வழங்கி இருக்கிறார். அது கவனிக்கப்பட வேண்டியது.

"இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு சகோதரர்களிற்கு இடையிலான உறவை போன்றது என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பார்.

"சீனா இலங்கையின் நெருங்கிய நண்பன். ஆனால் இந்தியா எங்களின் சகோதரன், சகோதரி போன்றது என்பார் அவர்.

"குடும்பத்திற்குள் மோதல்கள், கருத்து வேறுபாடுகள் எழக்கூடும். ஆனாலும் இறுதியில் அது உங்கள் குடும்பம் என அவர் தெரிவிப்பார்.

"இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வரலாற்று உறவுகளில் முக்கிய பங்கை வகித்தவர்கள் சீதை மற்றும் சங்கமித்த.

"எங்களின் உறவுகள் மிகவும் விசேடமானவை. எழுச்சிகள், வீழ்ச்சிகள் காணப்படும் எங்கள் உறவு நிச்சயமாக சமச்சீரற்றது. ஆனால் விசேடமானது.

"இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளை இந்தியா வழங்கிய உதவிகளுக்காக நாம் நன்றியுடன் உள்ளோம்.

"இந்தியா எங்களிற்கு நிதி உதவி மாத்திரம் செய்யவில்லை. எங்களிற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய அபிவிருத்தி சகாக்களுடன் பேசியுள்ளது. அவர்கள் எங்களிற்கு ஆதரவளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

"இந்தியாவின் பாதுகாப்பு நலன்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கமில்லை. இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் எங்களுடைய நலன்கள் என ஜனாதிபதி சமீபத்தில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றோம் என்பதே முக்கியம்.

"நாட்டில் பரந்துபட்ட ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததன் காரணமாகவும் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய சூழ்நிலையிலும் (சீனக்) கப்பல் குறித்து அவசரஅவசரமாக முடிவெடுக்கப்பட்டது" - என மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

ஆக, மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் தனது பண்பியல்பை சீன, இந்திய விடயத்தில் இலங்கை உறுதியாகத் தொடரப் போகின்றது என்பது உறுதி.

**- மின்னல் -**

## குருந்தூர் மலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய சபை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்த சிறிதரன் எம்.பி. மேலும் பேசுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையிலே தமிழர்களுக்குச் சொந்தமான குருந்தூர் மலை ஆதி சிவன் கோயிலுக்குச் சொந்தமானதும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்குச் சொந்தமானதுமான 612 ஏக்கர் காணிகளை நாளை (இன்று) புதன்கிழமை அடாத்தாக அளவீடு செய்து பௌத்த பிக்குவுக்கும் புத்த விகாரைக்கும் கொடுக்கத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் முயற்சிக்கின்றார். இது என்ன நியாயம்? இதற்கு தேசிய பேரவை என்ன செய்யப் போகின்றது? அனைத்துக் கட்சிகளையும் கொண்ட இந்தப் பேரவை எப்படி இதற்கு தீர்வு காணப்போகின்றது?

இன்று (நேற்று) காலையில் நானும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவைச் சந்தித்தோம். குருந்தூர் மலை பற்றிய விடயத்தைப்பற்றிப் பேசியபோது இவ்வாறு அளவீடு செய்வது தனக்குத் தெரியாது என அவர் கூறினார். அத்துடன் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யின் தொலைபேசி ஊடாக தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தைத் தொடர்பு கொண்டு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உடனடியாக அளவீட்டுப் பணியை நிறுத்துங்கள் எனக் கூறினார்.

அமைச்சரின் பணிப்பை ஏற்று 612 ஏக்கர் காணிகளை அளவீடு செய்வதைத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நிறுத்துகின்றாரா? இந்த நாட்டில் ஒரு அமைச்சருக்குரிய அதிகாரத்தை, அவர் பிறப்பிக்கின்ற உத்தரவைப் பணிப்பாளர் நாயகம் நிறைவேற்றுவாரா? என்பதனை நாங்கள் நாளை (இன்று) வரை பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது - என்றார்.

## தியாகி திலீபனின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகின்றோம்' என்ற ஊர்திப் பவனியானது கிழக்கு மாகாணத்தின் பொத்திவிலில் ஆரம்பித்து யாழ். நல்லூர் நோக்கி வருகின்றது.

5ஆம் நாளான நேற்றுமுன்தினமும், 6 ஆம் நாளான நேற்றும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவின் பல்வேறு கிராமங்களுக்கும் சென்றது. இதன்போது மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

குறித்த ஊர்தி கண்டி வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணித்தபோது கடமையில் நின்ற போக்குவரத்துப் பொலிஸார் ஊர்திப் பவனிக்கு இடையூறை ஏற்படுத்தி வாகனத்தை வழி மறித்து, ஊர்திப் பவனி தொடர்பான விளக்கங்களைக் கேட்டனர். அத்துடன் அதில் பயணித்தவர்களின் பெயர் விவரங்களையும் பதிவு செய்தமையுடன், சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் புகைப்படம் எடுத்ததன் பின் செல்வதற்கு அனுமதி வழங்கினர்.

## லஸந்தவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தது. ஆனால் இலங்கை அரசு அதில் பங்குபற்றவோ, பிரதிநிதித்துவம் செய்யாவோ, முன்னிலையாகவோ இல்லை.

இலங்கையில் லஸந்த படுகொலை விவகாரத்தை புலனாய்வு செய்த மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட பலர் இந்த விசாரணையில் சாட்சியமளித்தனர்.

இந்தத் தீர்ப்பு இலங்கை அரசை எந்த வகையிலும் சட்டக் கட்டுப்படுத்தலுக்கு உட்படுத்தாது. எனினும் தார்மீக ரீதியில் இது அரசுக்கு இழுக்கு எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

"இலங்கை அரசாங்கம் 13வருடங்களாக சாதிக்காததை நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் சாதித்துள்ளது. எனது தந்தையின் படுகொலைக்குநீதியைபெற்றுத்தந்துள்ளது" - எனப் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார். ஹேக்கின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் நேற்று இலங்கை அரசாங்கம் எனது தந்தையின் படுகொலையில் குற்றவாளி என்பதை கண்டறிந்துள்ளது என டுவிட்டர் பதிவில் அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

(மற்றொரு செய்தி 04 ஆம் பக்கத்தில்)

## தேர்தல் விவகாரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், தெரிவுக்குழு முன்வைத்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இராஜேந்திரன் கிறிஸ்ரி அமல்ராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்.ஜி.புஞ்சிஹேவா, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்,தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னநாயக்க, யாழ் மாவட்ட செயலர் க.மகேசன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பு மற்றும் சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சித் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலின் போது கருத்து தெரிவிக்கையில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி சபைக்குப் பொறுப்பான அமைச்சர் 2023 மார்ச் 20ஆம் திகதி வரை உள்ளூராட்சி சபையின் பதவிக் காலத்தை நீடிக்க செய்திருக்கின்றார். உள்ளூராட்சி சபை சட்டத்தின் அடிப்படையில் பார்க்கும்போது உள்ளூராட்சி சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முந்திய நாளிலிருந்து தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகின்றது.

தேர்தலுக்கான பிரகடனத்தை வெளியிடும் போது எந்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு நடைமுறையில் இருக்கிறதோ, அந்த வாக்காளர் இடாப்பையோ பயன்படுத்த வேண்டும். அந்தவகையில் 2021 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பை பயன்படுத்தி செப்டம்பர் 20ஆம் திகதியில் இருந்து உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான பிரகடனத்தை தேர்தல் ஆணைக் குழுவால் வெளியிடமுடியும்.

ஆனால் அவ்வாறு செய்தால் 18 வயதைக் கடந்த 350,000 புதிய வாக்காளர்கள் வாக்குரிமையை பயன்படுத்த முடியாது.

அந்தவகையில் 2022 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் 350,000 வரையானோர் புதிய வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டு நவம்பர் மாதம் அதனை அத்தாட்சிப்படுத்த நடவடிக்கைஎடுத்திருக்கின்றோம். அதன்பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மார்ச் 20 க்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவோம் - என்றார்.






# எந்தவொரு குடிமகனும் உணவு பற்றாக்குறையால் பட்டினி கிடக்கக் கூடாது என்கின்றது அரசாங்கம்

கொழும்பு, செப். 21

நாட்டில் எந்தவொரு குடிமகனும் உணவுப் பற்றாக் குறையால் பட்டினி கிடக்கக் கூடாது என்றும் குழந்தை கள் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி அலுவலகம் அரச நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஊட்டச் சத்து குறைபாட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்ப தற்கும் தொடர்ச்சியான முடிவுகளை அமுல்படுத்துவ தற்கும் துரிதப்படுத்தப்பட்ட தேசிய பல்துறை ஒருங்கி ணைந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கும் அமைச்சுகள், மாகாண சபை பிரதம செய லாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் கடுமையான உணவுப் பாதுகாப் பின்மை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளதாகவும் 66 ஆயிரம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் எனவும் 62 லட்;சம் மக்கள் மித மான கடுமையான உணவுப் பாதுகாப்பற்றவர்களாக இருக்கின்றனர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது என இலங்கை தொடர்பான சமீபத்திய ஐ.நா. அறிக்கை எச் சரித்துள்ள நிலையில் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி தலைமை யில் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போக்கு சபை யொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலு வலகம் தெரிவித்துள்ளது.

எந்தக் குடும்பமும் பட்டினியால் வாடாமல் இருக் கவும் எந்தக் குழந்தையும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படாமல் இருக்கவும் குடும்பங்கள் மற்றும் மக் களை வறுமைப் பொறியில் இருந்து மீட்க நடவடிக்கை எடுப்பதே அவர்களின் பணியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சி கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் 11 மாதங்களின் பின் கைது!



கிளிநொச்சி, பரந்தன் சிவபுரம் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் இளம் குடும்பஸ்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர் ஒருவர் 11 மாதங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிலுள்ள பரந்தன் சிவபுரம் பிரதேசத்தில் 27 வயதுடைய முத்தையா கேதீஸ்வரன் எனும் ஒரு பிள்ளையின் தந்தையே கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இரவு வெட்டிக் கொலை செய்யப்பட் டார்.

நவம்பர் மாதம் 17 ஆம் திகதி சம்பவ இடத்துக்கு கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ். சிவ பாலசுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் முன்பாக சடலம் உறவினர்களால் அடையாளம் காட்டப் பட்டதையடுத்து உடற்கூற்று பரிசோதனைகளின் பின் னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையில் கடந்த 11 மாதங்களாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

## நாட்டைப் பழைய நிலைமைக்கு 5 வருடங்களில் கொண்டுவரலாம்!

### அடித்துக் கூறுகிறார் ராஜித



நாட்டை பழைய நிலை மைக்கு கொண்டுவர 10 வரு டங்கள் எடுக்கும் என சிலர் கூறினாலும் ஐந்து வருடங் களில் அதனைச் செய்ய முடி யும் என ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பி னர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உணவு, மருந்து மற்றும் பால் மாவைத் தவிர மக்க ளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் உள்ளன என்றும் அவற்றை மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பணியில் ஜனாதிபதிக்கு உதவ தாங்கள் தயா ராக இருக்கிறோம் என்றும் அவர் மேலும் கூறியுள் ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்துக்கு பெருமை ஏது?

தென்னிலங்கை ஆட்சித் தலைவர்கள் எந்த நிலையில் ஆட்சிக்கு வந்தாலும் மாறப்போவதில்லை, பழைய பல்லவியையே பாடுவார்கள் என்பதற்கு தாமும் மாற்று அல்ல என்ற உண்மையை இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நிரூபித்து நிற்கிறார்.

நேற்று முன்தினம் லண்டனில் புலம்பெயர் இளைஞர் மத்தியில் அவர் ஆற்றிய உரை அதையே காட்டி நிற்கின்றது.

இலங்கையின் இன்றைய இழிநிலைக்கு – இந்த நாட்டில் மூன்று தசாப்த காலம் இரத்த ஆறு ஓடியமைக்கு – பிரதான காரணம், அடிப்படை எது என்று தெரியாதவர் போல ஜனாதிபதி உரையாற்றி இருக்கின்றார். இந்த உரை இரண்டு விடயங்களைத் தமிழர்களுக்கு – குறிப்பாகப் புலம்பெயர் தமிழர்களுக்கு – புலப்படுத்தி நிற்கின்றது.

ஒன்று – கடந்த கால தவறுகளுக்கான அடிப்படைகளை தென்னிலங்கைத் தலைமை புரிந்து, ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அடுத்தது – அதிலிருந்து, அந்தப் பாடங்களில் இருந்து, கற்றுக் கொண்டவற்றின் அடிப்படையில் தன்னை இத்தலைமைகள் திருத்திக் கொள்ளப் போவதில்லை.

இவைதான் அந்த இரண்டும்.

பல லட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையை அடாவடித்தனமாகப் பறித்தமை, தனிச் சிங்கள சட்டம், பல்கலைக்கழக அனுமதிக்குத் தரப்படுத்தல் என்று எந்தவித காரணமும் இன்றி இந்த நாட்டின் சிறுபான்மையினர் மீது பாகுபாடு, புறக்கணிப்பு, ஒதுக்கப்படல், திட்டமிட்ட அடக்குமுறை போன்ற இழிநிலைச் செயல்பாடுகள் – அராஜக அட்டூழியங்கள் – ஏவி விடப்பட்டமைக்கு அடிப்படை காரணமாக இருந்தது இந்த நாட்டின் ஜனநாயகம் என்ற கேலிக்கூத்துத்தான். அது இந்த நாட்டில் மதிப்பார்ந்த ஓர் ஆட்சி முறையேயல்ல.

நீதியையும், நியாயத்தையும் தர்க்க அடிப்படையில் கணக்கிடாமல், ஆதரவுத் தரப்புகளின் வெறும் அட்சர கணித எண்ணிக்கையில் மதிப்பீடு செய்யும் ஜனநாயகத்தின் மிகக் கேவலமான பண்பியல்பால்தான் இந்த நாட்டில் மிக மோசமான பேரினவாத வெறிப் போக்கு அராஜகங்கள் கட்டவிழ்ந்தன. அது மறைக்கப்பட முடியாத உண்மை.

இந்தியா போன்ற நாடுகள் ஜனநாயகத்தின் பெருமை, மாண்புகள் பற்றி பேசலாம். ஆனால் இலங்கையை பொறுத்தவரை, இலங்கைக்கு சிறுமையைத் தேடித் தந்ததே அந்த ஜனநாயக கோட்பாடுதான். உலகில் ஜனநாயகம் கீழ்த்தரமானது என்பதை நிரூபித்த நாடுகளில் ஒன்று இலங்கைதான்.

அந்த ஜனநாயகத்தின் பெயரில்தான் இங்கு பேரினவாதம் வலுப்பெற்று தனது கொடூரக் கரங்களை எண்ணிக்கையில் குறைந்த சிறுபான்மையினர் மீது கட்டமைத்து விட்டது. இந்தத் தீவில் சிறுபான்மையினரின் உரிமைகளை நிலை நிறுத்த வக்கற்ற இழிநிலையை ஏற்படுத்திய ஒரு கீழ்தரக் கோட்பாடாகவே அன்றும், இன்றும், என்றும் ஜனநாயகம் நீடித்து நிற்கின்றது. அதனால் இலங்கையில் ஜனநாயகம் குறித்து மாண்புறப் பேச முடியாது. அது கீழ்த்தரமான ஒன்றாகவே இங்கு கணிக்கப்பட வேண்டும். அப்படித்தான் யதார்த்தத்தில் அது செயற்பாட்டில் உள்ளது.

பிரிட்டனில் போய் நின்று இத்துணை இழுக்கான ஜனநாயகம் குறித்து புலம்பெயர் தமிழருக்கும் சேர்த்து போதனை நடத்தி இருக்கிறார் ஜனாதிபதி ரணில்.

உங்களுக்கு ஜனநாயகத்தின் ஆட்சி வேண்டுமா? ஒழுக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி இருக்க வேண்டுமா? – என்று அவர் கேட்பது வெறும் விதண்டாவாதம்.

அநீதிக்கும் பேரினவாத செயற்பாடுகளுக்கும் அடக்குமுறைக்கும் பாகுபாட்டுக்கும் சிறுபான்மையினரை ஒடுக்கும் புறக்கணிப்புக்கும் வெற்றிலை வைக்கும் ஜனநாயக இழுக்குப் பண்பியல்பு தமிழருக்குத் தேவையில்லை.

ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேறும் இந்த இழிவான பண்பியல்பை மாற்ற முடியாத தென்னிலங்கைத் தலைமைகள், ஜனநாயக மாண்புகள் குறித்து பேசுவது சாத்தான் ஓதும் வேதத்திற்கு ஒப்பானது. இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இந்தத் தீவில் ஜனநாயகம் என்பது உயர்வானதல்ல. இழிவான ஓர் அடக்குமுறை வடிவம்தான். அதை மறுப்பதற்கு இல்லை.

# சர்வாதிகார ஆட்சியையே ரணிலும் முன்னெடுக்கிறார்!

### இராதாகிருஷ்ணன் காட்டம்



கடுமையானவர் எனக் கருதப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷகூட சர்வாதிகாரத்தைக் கையில் எடுக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது சர்வாதிகார ஆட்சியையே முன்னெடுத்து வருகின்றார். அதன் தாக்கம் இன்று ஜெனிவாவில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.' – என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ்த் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

மஸ்கெலியா பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த சந்திப்பில் மலையகத் தொழிலாளர் முன்னணியின் நிதி செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன், மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ராஜாராம், மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ்குமார் என பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எமது நாடு வங்குரோத்து நிலைமையிலேயே இருக்கின்றது. டொலர் வருமானம் இல்லை. தான்தான் என்ற மமதையுடன் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியை முன்னெடுத்தாலும், தன்னிச்சையான முடிவுகளாலுமே நாட்டுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இறுதியில் நாட்டைவிட்டே ஓட வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷ தரப்பின் வாக்குகளால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். அவரின் அண்மைய கால செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன. போராட்டக்காரர்களுக்கு எதிராக அடக்குமுறை கையாளப்பட்டது. அதன் தாக்கம் இன்று ஜெனிவாவில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ தவறான தீர்மானங்களை எடுத்தார். சர்வாதிகாரத்தைக் கையில் எடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகார ஆட்சியை நடத்திவருகின்றார். இதனால் நாட்டு மக்கள் துன்பப்படுகின்றார்கள். நாட்டில் வாழ்க்கைச்செலவு உச்சம் தொட்டுள்ளது.

அதேவேளை, மஸ்கெலியா பகுதியில் தோட்டக் கம்பனிகளின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. தீபாவளிக்கான முற்கொடுப்பனவை வழங்க முடியாது என பல அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. அப்பகுதியில் தொழிற்சங்கநடவடிக்கை இடம்பெறுகின்றது. எனவே, அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இதனை எதிர்கொள்ள வேண்டும்.

மாறாக, நாம் பிளவுபட்டு நின்றால் அது நிர்வாகத்துக்கே சாதகமாக அமையும். எமது பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜெனிவாவில்கூட பேசப்படுகின்றது. இதனை நாம், முன்னேற்றத்துக்கான களமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சீனாவிடம் பெருந்தொகை கடன் வாங்கியே தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. அந்த கடனை செலுத்த எம்மிடம் இருந்தே இன்று பணம் அறிவிடப்படுகின்றது. – என்றார்.

# நாட்டைச் சீரழித்தவர்களுக்கு மீண்டும் கிடைத்தன பதவிகள்!

### ரிஷாத் எம்.பி. சீற்றம்



நாடு சீரழியக் காரணமான இருந்த முன்னாள் அமைச்சர்களுக்கே மீண்டும் அமைச்சு பதவி நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நாவில் வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை செய்யாவிடின் சர்வதேசம் தண்டிக்கும் என்ற செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும் ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சளவிலேயே கூறும் அரசாங்கம் நாட்டை பற்றியோ அரசமைப்பை பற்றியோ அல்லது நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என ரிஷாத் பதியூதீன் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியாவில் மக்கள் சந்திப்பொன்றில் பேசிய அவர், 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாகநடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் காலதாமதம் செய்யாமல் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இலங்கை அரசாங்கம் குற்றங்களை இழைத்துள்ளது
## ஊடகவியலாளர் படுகொலை மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பு

இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளரின் சர்வதேச மனித உரிமைகள் பாரதூரமான மீறலுக்கு இலங்கை பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குறிப்பாக வாழும் உரிமை கருத்துச் சுதந்திரம் மற்றும் பயனுள்ள தீர்வுக்கான உரிமை ஆகியவற்றை மீறியுள்ளதாக குற்றப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகவும் பிரபலமான மற்றும் வெளிப்படையாகப் பேசும் ஊடகவியலாளர் ஒருவர் மீதான துணிச்சலான தாக்குதலுக்கு லசந்தவின் படுகொலை எடுத்துக் காட்டு எனக் கூறியுள்ளது.

மேலும் சுதந்திர சிந்தனையுள்ள ஊடகவியலாளர்கள் அந்தக் காலத்திலும் இன்றும் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சினையை இது காட்டுவதக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் இரண்டு நாள்களில், 2004 – 2010 இற்கு இடையில் 27 ஊடகவியலாளர்கள் மற்றும் 17 ஊடகப் பணியாளர்கள் சட்டத்துக்குப் புறம்பாகக் கொல்லப்பட்டது தொடர்பான சாட்சியங்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன, அவர்களில் குறைந்தது 35 பேர் தமிழர்கள்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு - இந்தியப் பல்கலைக்கழகங்கள் கல்விசார் ஒத்துழைப்பில் சேர்ந்து செயற்பாடு



குறைந்தபட்சம் 48 இந்தியப் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுடன் கல்விசார் ஒத்துழைப்பைத் தொடங்கியுள்ளன அல்லது ஒப்பந்தங்களை இறுதி செய்யும் முனைப்பில் உள்ளன என்று இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் எம்.ஜெகதேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

இந்திய மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுக்கு இடையே மூன்று வகையான பட்டப்படிப்பு திட்டங்களை வழங்குவதற்கு இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு மே மாதம் அனுமதித்தது. அவை:- இரட்டை (இரு கல்லூரிகளும் ஒரே பாடத்தில் பட்டம் வழங்குவது), கூட்டு மற்றும் இரட்டையர் (பாடத்தின் ஒரு பகுதி. இரட்டையர் திட்டங்களில் மேல் வரம்பு முப்பது வீதமாகவும், கூட்டுத் திட்டங்களில் குறைந்த வரம்பு முப்பது வீதமாகவும் வெளிநாடுகளில் முடிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும்).

குமார் கூறுகையில், பல்கலைக்கழக மானியக் குழு (இந்திய மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையேயான கல்விக் கூட்டுறவில் இரட்டையர், கூட்டுப் பட்டம் மற்றும் இரட்டைப் பட்டப் படிப்புகள்) விதிமுறைகள், 2022இன் அறிவிப்பிற்குப் பிறகு, தகுதியான வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுடன் கல்விசார் ஒத்துழைப்பில் ஈடுபடுமாறு அனைத்து தகுதி வாய்ந்த பல்கலைக்கழகங்களுக்கும் கோரிக்கை விடுத்து கடிதம் எழுதியது என்றார்.

மொத்தம் 230 இந்திய மற்றும் 1,256 வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்கள் இந்தத் தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்கின்றன.

"பிரதிபலிப்பு அமோகமாக உள்ளது. மற்றும் இது வரை, 48 இந்தியப் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களுடன் கல்வி ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ளன அல்லது ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்யும் மேம்பட்ட கட்டத்தில் ஈடுபட்டுள்ளன என்று குமார் மேலும் கூறினார்.

(மூலம்:'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்')

# ஐ.நா. பொது அமர்வில் இந்தியா சார்பில் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்

## பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்புரிமைக்கு மிகுந்த அழுத்தம் தருவார்




நியூயோர்க்,செப்.21

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் உயர்மட்டக் கூட்டத்திற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஞாயிற்றுக்கிழமை நியூயோர்க் வந்தடைந்தார். இங்கு இந்த வார இறுதியில்



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் மற்றும் பல நாட்டுத் தலைவர்களை அவர் சந்திப்பார்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஜெய்சங்கர் வந்தடைந்தபோது அவரை ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருசிரா காம்போஜ் மற்றும் கன்சல் ஜெனரல் (நியூயோர்க்) ரந்தீர் ஜெய்ஸ்வால் ஆகியோர் வரவேற்றனர்.

இந்த வாரத்தில் ஜெய்சங்கர் இருதரப்பு, பன்முக மற்றும் பலதரப்பு சந்திப்புகள் உட்பட 50 க்கும் மேற்பட்ட உத்தியோகபூர்வ ஊடாட்டங்களை நடத்த உள்ளார்.

இந்திய அமைச்சர் சனிக்கிழமையன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் இந்தியாவின் உரையை வழங்க உள்ளார்.

ஒரு நீர்நிலை தருணம்: ஒன்றோடொன்று பிணைந்த சவால்களுக்கு மாற்றும் தீர்வுகள் என்ற கருப்பொருளில் சபை கூடுகிறது.

பாதுகாப்பு கவுன்ஸிலின் சீர்திருத்தங்கள் ஜெய்சங்கரின் நிகழ்ச்சி நிரலில் முதன்மையான உருப்படியாக இருக்கும்.

அவர் சட்டமன்ற அமர்வுகள் மற்றும் பக்கவாட்டில் பல நிகழ்வுகள் நிறைந்த வாரத்தில் டசின் கணக்கான உலகத் தலைவர்களைதையொட்டிச் சந்திக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் சீர்தி



ருத்தத்திற்கான யோசனைகளை முன்வைத்து மற்ற தலைவர்களுடன் கலந்தாலோசிக்க இருக்கின்றமையால், கவுன்சில் சீர்திருத்தம் அமர்வின் போது ஊக்கமளிக்கும் என்று அமெரிக்க நிரந்தர பிரதிநிதி லிண்டா தாமஸ் - கிரீன்பர்க் கூறுகிறார்.

முன்னாள் இராஜதந்திரியான இந்திய வெளிவிவகார் அமைச்சர் 'ஜி4'இன் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தையும் நடத்த உள்ளார், இது இந்தியா, பிரேசில், ஜேர்மனி மற்றும் ஜப்பானை உள்ளடக்கிய குழுவாகும்.



இன்று தொடங்கும் தனது 11 நாள் அமெரிக்க பயணத்தின் போது, ஜெய்சங்கர் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா, பிரிக்ஸ் மற்றும் பல முக்கிய குழுக்களின் குவாட் கூட்டங்களிலும் பங்கேற்கிறார். இந்த நாடுகள், ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலை விரிவுபடுத்துவதற்கு வாதிடுவது அதேசமயம் அதில் நிரந்தர உறுப்புரிமைக்கான ஒவ்வொன்றினதும் கோரிக்கைக்காக பரஸ்பரம்தங்களுக்குள்ஒன்றுக்கொன்று ஆதரவும. கொண்டுள்ளன.

கடந்த ஞாயிறு தொடங்கிய தனது 11 நாள் அமெரிக்கப் பயணத்தின் போது, ஜெய்சங்கர் இந்தியா, ஆஸ்திரேலியா,



ஜப்பான் மற்றும் அமெரிக்கா, பிரிக்ஸ் மற்றும் பல முக்கிய குழுக்களின் குவாட் கூட்டங்களிலும் பங்கேற்கிறார்.

இந்திய தேசத்தின் 75 ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் வகையில், ஜெய்சங்கரின் வருகையின் சிறப்பம்சமாக சனிக்கிழமையன்று இந்தியா75: இந்தியா ஐ.நா. கூட்டாண்மையை செயலில் காட்டுதல் என்ற பெயரில் ஐ.நாவுடன் புதுடில்லியின் ஒத்துழைப்பு மற்றும் ஐ.நாவின் நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கிய அதன் அணிவகுப்பு நடைபெறும்.

கொவிட் தொற்றுநோய்களின் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 153 நாட்டுத் தலைவர்கள் அல்லது அரசாங்கத் தலைவர்கள், மூன்று துணைப் பிரதமர்கள் மற்றும் 34 வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படும் ஐ.நா. பொதுமன்றத்தின் உயர்மட்டக் கூட்டம் ஒரு முழுமையான வடிவத்திற்கு இம்முறை திரும்புகிறது.

ஜெய்சங்கர் செப்டம்பர் 18 முதல் 24 வரை நியூயோர்க்கில் இருப்பார். அதே நேரத்தில் அவர் செப்டம்பர் 25 முதல் 28 வரை வொஷிங்டன் டி.ஸிக்குச் செல்வார் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமையன்று நியூயார்க்கிற்கான தனது பயணத்தை முடித்துக் கொள்ளும் அவர், ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு வொஷிங்டனுக்குச் செல்ல உள்ளார்.

இந்தியா - அமெரிக்க மூலோபாய கூட்டாண்மையை ஒருங்கிணைக்கும் வகையில் 'பன்முக இருதரப்பு நிகழ்ச்சி நிரலின் உயர்மட்ட மதிப்பாய்வு மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான' செயற்பாடாக இது அமையும் என இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியது.

வொஷிங்டனில், ஜெய்சங்கர் வெளியுறவு செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் பிடன் நிர்வாகத்தின் பிற மூத்த அதிகாரிகளை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட ஒரு வட்ட மேசை சந்திப்பும் வொஷிங்டனுக்கான நிகழ்ச்சி நிரலிலும் உள்ளது.

(மூலம்:ஏ.என்.ஐ.)

காலைக்கதிர் Kalaikkathir

# தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் தந்திர சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கக்கூடாது

## ஜீவன் தொண்டமான் அறிவுறுத்தல்



ஒருமித்த நோக்குடன் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தால் வெற்றி நிச்சயம். தொழிலாளர்களுக்கு பக்கபலமாக நாம் நிற்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்ட தொழிலாளர்கள் கடந்த சில நாள்களாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் குறித்த தோட்ட தொழிலாளர்களை ஜீவன் தொண்டமான், சந்தித்துக் கலந்துரையாடிய பின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமானது, தொழிலாளர்களைத் துன்புறுத்திவருகின்றது. இந்நிலையில் தமது தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். நாமும் அதற்குப் பக்கபலமாக இருக்கின்றோம். எதற்காகத் தற்போது தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என நீங்கள் கேட்கலாம்.

ஆயிரம் ரூபா தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. அதனால்தான் நாம் நடவடிக்கையில் இறங்கவில்லை. தற்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்துள்ளது.

தொழிற்சங்கங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. எமது கோரிக்கை நியாயமானது. அதனால்தான் போராடுகின்றோம். நாளை நாம் சம்பள நிர்ணய சபைக்கு சென்றால்கூட எமக்குத்தான் சாதகமாக அமையும்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒற்றுமை இருக்க வேண்டும். அவ்வாறு ஒற்றுமை இருப்பது எமக்குப் பலம். எனினும், அந்த ஒற்றுமை எம்மிடையே முழுமையாக இல்லை. அது எமது பலவீனமாகும்.

எமது இந்த பலவீனம் நிர்வாகத்துக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. எமது ஒற்றுமையைக்கண்டு தோட்ட நிர்வாகங்கள் நடுங்க வேண்டும். ஆயிரம் ரூபாவை ஓரணியில் நின்று கேட்க வலியுறுத்தினோம்.

அச்சத்தால் தொழிலாளர்கள் பிளவுபட்டு நின்றனர். துரைமாரை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. கட்சி, தொழிற்சங்க பேதங்களும் அவசியமில்லை. தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒழுக்கமாகச் செயற்பட வேண்டும்.

மக்கள் ஒன்றிணைந்து நாட்டின் ஜனாதிபதியையே மாற்றினர். எனவே, ஒற்றுமையின் வலிமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மலையகத்துக்கு திடீரென வரும் சில அரசியல்வாதிகள், தொழிற்சங்கங்களை விமர்சிப்பார்கள், ஆனால் கம்பனிகளை விமர்சிப்பதில்லை. அப்படியானவர்கள் கூறும் கருத்தை எம்மவர்களில் சிலர் நம்புவதும் உண்டு. இந்நிலைமையும் மாற வேண்டும். என்றார்.

# கசிப்பு உபகரணங்கள் மற்றும் வாள்களுடன் யாழ். ஆனைக்கோட்டையில் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் 08 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் , 50 லீற்றர் கோடா மற்றும் 03 வாள்கள் என்பவற்றுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் நபர் ஒருவர் ஈடுபட்டு வருவதாக யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த புலனாய்வு பிரிவினர் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன் போது அங்கிருந்து 08 லீற்றர் கசிப்பு , கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் , உபகரணங்கள் , 50 லீற்றர் கோடா மற்றும் 3 வாள்கள் என்பவற்றை மீட்டதுடன், அங்கிருந்த 38 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரையும் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவந்து சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பௌர்ணமித் தினத்தன்று விகாரைகளில் மின்விளக்குகளை அணைக்க நடவடிக்கை



நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து விகாரைகளிலும் எதிர்வரும் பௌர்ணமி தினத்தன்று மின் விளக்குகளை அணைத்து மின் கட்டணம் அதிகரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மத்திய மாகாண மகா சங்க கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த யோசனை தொடர்பில் கருத்து தெரிவித்த வணக்கத்துக்குரிய கலஹா சிறிசாந்த தேரர், விகாரைகளில் மின் கட்டணம் ஐந்தாறு மடங்கு அதிகரித்துள்ளது. எங்களது விகாரையின் மின் கட்டணம் இதுவரை 60 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

வெசாக் போன்ற காலங்களில் ஆலயங்களை இருளில் மூழ்கடிக்கும் சதியா இது என்ற பலமான சந்தேகம் எமக்கு உள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையால் இனி வரும் காலங்களில் விகாரைகளில் தீபம் ஏற்ற வேண்டிய அவசியமில்லை.

வரவிருக்கும் பௌர்ணமி நாளில் அனைத்து விகாரைகளிலும் மின்சாரத்தை துண்டித்து, விகாரைகளை இருளில் மூழ்கடித்து, நன்கொடையாளர்களுடன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆலோசனையை முன்வைக்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 96 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்படும்!

## லங்கா ஐ.ஓ.சி. உத்தரவாதம்

இலங்கையில் 96 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்து இருபது வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இந்தநிலையில், நாரஹேன்பிட்டி கொத்தலாவல ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அந்த நிறுவனத்தின் இயக்குநர் விக்யன் குமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது 214 ஐ.ஓ.சி. எரிவாயு நிலையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பளம் வழங்காவிட்டால் தக்க பதிலடி வழங்கப்படும்!

## செந்தில் தொண்டமான் எச்சரிக்கை



மஸ்கெலியா பிளாண்டேசன், எதிர்வரும் 10, 11 ஆம் திகதிக்குள் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்றும் இந்த விடயத்தில் இழுத்தடிப்புக்கள் இடம்பெற்றால் தக்கபதிலடி வழங்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்ட தொழிலாளர்கள் கடந்த சில நாள்களாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் இந்தத் தோட்டத் தொழிலாளர்களை பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர், தவிசாளர் உறுப்பினர்கள் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு –

டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் தேயிலை ஏற்றுமதி மூலம் சிறந்த வருமானம் கிடைக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தொழிலாளர் ஒருவர் 4 கிலோ பச்சைக்கொழுந்து எடுத்தாலே அவர்களின் சம்பளம் ஈடாகிவிடுகின்றது.

அதற்கு அப்பால் பறிக்கப்படும் கொழுந்து மூலம் கம்பனிகளே இலாபம் அடைகின்றன. அதாவது நாளொன்றுக்கு சுமார் 6 ஆயிரம் ரூபாவரை உழைத்துக்கொடுத்துவிட்டே தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா பெறுகின்றனர்.

மஸ்கெலியா பிளாண்டேசன், எதிர்வரும் 10, 11 ஆம் திகதிக்குள் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும்.

மாறாக இழுத்தடிப்பு இடம்பெற்றால், பெருந்தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும். அரச நிறுவனத்தால் பராமரிக்க முடியவில்லையெனில், தொழிலாளர்களுக்கு காணியைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் போன்ற எமது மறைந்த தலைவர்கள் காங்கிரஸின் உள்ள அனைவருக்கும், தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாகப் பயிற்சியளித்துள்ளனர்.

அவர்கள் காட்டிய வழியில் நாம் பயணிக்கின்றோம். எனவே, தொழிலாளர்கள் தளர்ந்து விடக்கூடாது.

இதைவிட பயங்கரமான போராட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். ஒற்றுமையாக இருங்கள். என்றார்.

# நாட் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி மஸ்கெலியாவில் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்!




மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை உடனடியாக 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள பல தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான மஸ்கெலியா கிளன்டில்ட் தோட்டத்திலும் போராட்டம் நடத்தப்பட்டது.

அத்தோடு, லக்ஷபான மற்றும் பிரவுன்ஸ்வீக் தோட்டங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

போராட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் எதிர்ப்புப் பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் –

நாட்டில் உள்ள ஏனைய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள அனைத்து தேயிலை தோட்டங்களிலும் நாளாந்த சம்பளம் 1000 ரூபா முதல் 1200 ரூபாவரை வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் மட்டும் 1000 ரூபாவுக்குக் குறைவான சம்பளம் கொடுத்து அதிக லாபம் பெற்று அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை ஒடுக்குவதாகவும், தோட்டத் தொழிலாளர்கள், தற்போது கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மூன்றுவேளை உண்பவர்கள் தற்போது ஒருவேளை மாத்திரமே உண்பதாகவும், குழந்தைகளுடன் வறுமையில் வாடுவதாகவும், இதனால் எதிர்காலத்தில் பட்டினியால் இறக்க நேரிடும் எனவும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

**அங்கம் - 127**



புலிகளின் பேச்சுக் குழு பிரேமதாஸாவைக் கொழும்பில் சந்தித்த போது. சஜித் பிரேமதாஸாவும் உடனிருந்தார்.

தமிழர்கள் தங்களுடன் இருந்த புத்திஜீவிகளின் ஆற்றல்களாலும், அரசியல் அனுபவங்கள் கொண்டிருந்த தலைவர்கள், அவர்கள் கடைப்பிடித்திருக்கக்கூடிய அணுகுமுறைகள், சாதுரியங்கள் போன்றவற்றாலும் தமிழரது இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற வேறு வழிகளில் முன்னேறி இருக்கலாம்.

பின்னர் தவிர்க்க முடியாமல் திணிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் கூட, முல்லையோ, மல்லிகையோ போன்று பாரி தந்த தேரில் படர்ந்திருந்தால் பூத்து மணம் வீசி இருக்கலாம். அவற்றின் புரிந்துணர்வுகளை – சர்வதேச எதிர்பார்ப்புகளை – தமிழ் மக்களின் புத்திஜீவிகள் கணக்கெடுக்காது, கரைகின்ற சில காகங்கள் பிண்டத்தைக் கொண்டு செல்லட்டும் என்று அக்கறையின்றி இருந்த நிலைகளோ, ஆடப்பட்ட ஆரிய கூத்துக்களில் லயித்து காரியத்தை கோட்டை விட்டதோ இந்த ஒட்டுமொத்த நிலைகளுக்கும் முக்கிய காரணமாகி விட்டன.

சர்வதேச எதிர்பார்ப்புகள், சந்தர்ப்பங்கள் கிடைத்த போது அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றிலிருந்து படிப்படியாக இலட்சியத்தை நோக்கி முன்னேறாதமையும், 'நான் பலவான்' என ஒரு பகுதி முன்னேற, அவர்களுக்குப் பின்னால் வழிகள் எதுவுமின்றி ஆரியக் கூத்துக்கு பஜனை பாடியதும், இந்த நிர்க்கதிக்குக் கொண்டு வந்து விட்டுள்ளன என்பது பலரதும் கருத்து.

மேற்கத்திய ஜனநாயகங்களின் கட்டமைப்புக்களிலும், அவர்களது சித்தாந்தங்களிலும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஆயுதம் கலந்தால் அது வன்முறையாகக் கணிக்கப்படும். ஆனாலும், பல சர்வதேச நாடுகள் தங்களுக்கு அனுகூலமான பொருளாதார, அரசியல் ஆதாயங்களை அடைந்து கொள்ள வன்முறைகளுக்கு ஆதரவும் தூண்டுதல்களும் தரும். ஆனால் அந்த வன்முறைகள் பேசப்பட்டாலும், அவை அந்த விடயத்தை ஒட்டிக்கிடைக்கும் ஆதரவிலும் கிடைத்த தீர்விலும் எடுக்கப்பட்ட பாதைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்று விளங்கப்பட்டு விடும் (the end justify the means). தமிழ் மக்களின் விடுதலைப் போராளிகளுக்கு இந்தியா தந்த ஆதரவும் அத்தகையதாக இருந்தது.

ஜே.ஆர். சர்வதேசத்திடமும் இந்திரா காந்தி செய்வதை – ஏன் அவரிடமே கூட – முறைப்பட்டார். ஆயினும் அவை கணக்கெடுக்கப்படவில்லை.

திம்பு மாநாட்டில் விடுதலைப் போராளிகளுக்கு இடம் கொடுத்து, அவர்களோடு இருந்து பேசுவதா, அவர்கள்'பயங்கரவாதிகள்' என்ற எதிர்ப்பை ஜே.ஆர். முன்வைத்த போதும் அவை மீறப்பட்டு அவர்கள் பேச்சு வார்த்தைகளில் இருத்தப்பட்டார்கள்.



பிரேமாவும் மதியுரைஞர் பாலாவும் நெருக்கமாக.

தங்களைத்தான் தமிழ் மக்களின் தலைவர்களாக கணித்துப்பேசவேண்டும் என விடுதலை குழுக்கள் நின்றாலும் – தமிழர் விடுதலைக் கூட்டணி அப்புறப்படுத்தப்பட வேண்டும் என இந்தியப் பகுதிக்கு அவர்கள் மகஜர்கள் தந்தாலும் – கடைசியில் மதியுரைஞரின் புத்திமதியில் அந்த எதிர்ப்புக்களைக் கைவிட்டு, பேச்சு வார்த்தைகளில் அமர்ந்தமைக்குக் காரணம் அவர்களுக்கு (விடுதலை குழுக்களுக்கு) இந்த நடவடிக்கையின் ஊடாக சர்வதேச அங்கீகாரம் கிடைக்கின்றது என்பதினாலேயே.

ஆனாலும், இந்திய எதிர்ப்பு நிலையின் பின் விடுதலைப் புலிகளால் அந்த சர்வதேச அங்கீகாரங்களை இன்று வரை நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை.

பிரேமதாஸா விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கிய போதும் ஸ்ரீலங்கா அரசு அவர்களை பயங்கரவாதிகள் என்ற பட்டியலில் இருந்து விலக்க விரும்பவில்லை. ஆனால் பின் அவர்களின் நிர்ப்பந்தத்தில் பேச்சுவார்த்தை காலங்களில் தமிழ் மக்களுக்கு – முக்கியமாக தமிழீழ விடுதலை புலிகளுக்கு – எதிரியாக இருந்து அப்போது கூட்டணியாக மாறிவிட்ட சிங்கள அரசாங்கத்தால் இது செய்யப்பட்டு, காரியங்களுக்காக அவை நடத்தப்பட்டாலும், மனதளவில் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்தியப் படைகளின் வெளியேற்றத்தின் பின் விடுதலைப் புலிகள் ஆயுதம் தரித்திருந்த போதும், ஸ்ரீலங்காவின் இராணுவ ஹெலிக்கொப்டர்கள், அவர்களது வாகனங்கள் புலிகளின் அங்கத்தினர்களை தமிழ் பகுதிகளின் பல மூலைகளிலும் இருந்தும் அழைத்துச் சென்று அவர்கள் எங்கு செல்ல வேண்டுமோ அங்கு கொண்டு போய் விட்டன. ஆனால் சிங்களத் தரப்புகளின் தந்திரங்கள், தங்களது தேவைகள் முடிந்தபின் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அந்தஸ்து வந்து விடாமல் பயங்கரவாதிகளாகவே வைத்துக் கொள்வதில் தான் நாட்டமாக இருந்தது.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வாகரை சம்மேளனம்

தமிழக முதல்வர் கருணாநிதியினால் ஏற்படுத்தப்பட்ட மூன்று சுற்று பேச்சுகளில் ஈடுபட்டு, விடுதலை புலிகள் ஈ.பி.ஆர்.எல். எவ்வுடன் இணைந்து, மாகாண சபையை நடத்த முன்வர மாட்டார்கள் என்ற முடிவுகளைத் தெரிவித்து, தங்களது ஆதரவாளர்களையும் சந்தித்து சென்னையிலிருந்து நாடு திரும்பியிருந்தனர் மதியுரைஞரும் யோகியும்.

பிரேமதாஸா வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு நடத்தவிருக்கும் தேர்தலில் தாங்கள் ஏகோபித்த தலைவர்களாக – சர்வதேச ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலாக அந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் காரியமாற்றினார்கள்.

தங்களுக்கு எதிரியாக இருந்த இந்தியாவோடு இருந்த போரை வென்று, அவர்களை வெளியேற்றி விட்டோம் என்ற புளகாங்கிதம் அவர்கள் எல்லோரிடமும் பரந்து இருந்தது. அதனைக் கொண்டாட விரும்பினார்கள். இதுவரை போராட்டங்களால் களைப்புற்றிருந்த போராளிகளின் ஓய்வுக்காகவும், அவர்கள் புத்துயிர் பெறவும், சிறு களியாட்டங்களில் ஈடுபடவும் அவர்களின் அரசியல் பிரிவு விடுதலை புலிகள் மக்கள் முன்னணி (People's Front of Liberation Tigers) தங்களது முதலாவது சம்மேளனத்தை ஒரு வாரத்துக்கு (1990 பெப்ரவர் 24 இல் இருந்து மார்ச் 01 வரை) வாகரை ஓய்வு விடுதியில் (Rest House) ஒரு வார காலத்துக்கு நடத்தினர். இந்த சம்மேளனத்துக்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும், அங்கத்தினர்களை ஏற்றி இறக்குவதிலும் பிரேமதாஸா அரசு கை கொடுத்தது.

அரசியல் தேர்தல் கருதி இங்கு அங்கத்தினர்கள் சாதி ஒழிப்பு, பெண்களின் விடுதலை, சீதன ஒழிப்பு போன்ற பலவகைத் தீர்மானங்களை நிறைவேற்றி, முக்கியமாக விடுதலை புலிகள் மக்கள் முன்னணி தேர்தலுக்காக எவ்வாறு கிளைகள், கட்டமைப்புகள் உருவாக்குவது என்பது பற்றி வெகு நேரங்கள் செலவழித்தனர். ஆனாலும் இவற்றை அடிவேரோடு கிள்ளி விடுவதிலேயே பிரேமதாஸாவின் கவனங்கள் இருந்தன.

1990 ஆம் ஆண்டு முற்பகுதியில் பிரேமதாஸாவின் இராணுவம் பலத்த தாக்குதல்களையும் மோசமான மனித உரிமை மீறல்களையும் நடைமுறைப்படுத்தி, விஜயவீர, உபதிஸ்ஸ கமநாயக்கா போன்ற ஜே.வி.பியின் முன்னணித் தலைவர்களையும் கொன்று அக்கட்டமைப்பை கட்டுப்படுத்தி இருந்தது. அவரது கவனம் சிங்களப் பேரினவாதத்திற்காக விடுதலை புலிகளையும் சமன்கட்டுவதிலேயே இருந்தது.

புலிகள் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை வாபஸ் பெற வலியுறுத்தி இருந்தார்கள். அதைச் செய்தால் பிரிவினையைச் சட்டரீதியாகக் கேட்கக. கூடிய உரித்து புலிகளுக்கு வரும். அடுத்த மாகாண சபைத் தேர்தல் இணைந்த மாகாண சபைக்காக இருக்கும். அதில் விடுதலைப் புலிகளே வெல்லும் சாத்தியம் இருந்தது.

அதனால் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் தேவையான மூன்றிலிரண்டு பங்கு ஆதரவு தனக்கு கிட்டுமா என்று கேள்வி உண்டு என சில காலங்களை பிரேமதாஸா கடத்தினார்.

அதேசமயம், விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்பட்ட தேர்தலுக்கு முன்னர், புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று புலிகளின் உயிர்நாடியைப் பிடித்த நிர்பந்தத்தைத் தந்தார் பிரேமதாஸா.

ஆயுதங்கள் தரித்த ஒரு வன்முறை குழுவுக்கு, அரசியல் இணக்கத் தீர்வு என்ற அடிப்படையில் சர்வதேச அங்கீகாரம் கிட்டுவதை அவர் விரும்பவில்லை. அது நாட்டின் இறைமைக்குப் பலவீனமாகும் எனக் கணித்த பேராண்மைகளின் அறிவுஜீவிகளுக்கு அவர் காது கொடுத்தார். 1956 இல்,பின் ஆகிய 1987 இல், இப்பொழுது பிரேமதாஸா என படிப்படியாக அந்தச் சிந்தனை – அதே சிந்தனை தான் – தொடர்ந்தது. அதே சமயம் தமிழ் மக்களது ஒற்றுமையின்மை அவர்களுக்குக் குழி தோண்டியது.

(வளரும்...)

## தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு .......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள நெருக்கடிக்களை வெற்றிகொண்டு, வளமான தேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று பிரிட்டன் வாழ் இலங்கையர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், புலம்பெயர் அலுவலகப் பணிகள் உள்ளிட்ட இலங்கையில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள பிரிட்டன் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரிட்டன் வாழ் புலம்பெயர் இலங்கையர்களுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

பிரிட்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பிரிட்டன் வாழ் இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

புதிய அரசின் எதிர்கால திட்டங்கள் குறித்து இதன்போது விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புகளில் இணைந்து கொள்ளுமாறு பிரிட்டன் வாழ் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

பிரிட்டனின் புதிய மன்னரின் தலைமையில் பொதுநலவாய நாடு என்ற வகையில், எதிர்கால சவால்களை இலங்கை வெற்றிகொள்ளும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

இங்கு உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் –

எதிர்காலத்தில் நாம் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து பொதுநலவாய செயலாளர் நாயகத்துடன் கலந்துரையாடவுள்ளோம். பொதுநலவாய அமைப்பு வலுவடைந்து முன்னேறிச் செல்ல வேண்டும். அதேபோன்று இங்கிலாந்துக்கு உள்ள பிரச்சினைகளை அவர்கள் வெற்றிகரமாக தீர்த்துக்கொள்வார்கள்.

இங்கிலாந்து எங்களுடன் நீண்டகால நட்பு கொண்டுள்ளது. எமது நாடு ஐக்கிய இராச்சியத்தின் ஆட்சியின் கீழ் இருந்த போதும், சுதந்திர நாடாக நாம் இங்கிலாந்துடன் சிறந்த உறவுகளைப் பேணி வருகின்றோம்.

எங்கள் உறவு நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இங்கிலாந்துடன் உடன்படும் சந்தர்ப்பங்களைப் போன்றே, உடன்படாத சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

ஆட்சியில் இருப்பது தொழிற்கட்சி அல்லது கன்சர்வேடிவ் கட்சி அல்லது கூட்டணி என எதுவாக இருந்தாலும், நாங்கள் இங்கிலாந்துடனான எமது உறவைத் தொடர்ந்து பேணவே விரும்புகின்றோம்.

எமது நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பது இரகசியமல்ல. இந்தப் பிரச்சினையை நாமே தீர்க்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனுடனான அதிகாரிகள் மட்ட ஒப்பந்தத்தில் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளோம்.

நாம் இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் தனியார் கடன் வழங்குநர்களுடனும் பேச்சு நடத்த வேண்டும். நாம் பெற்றுள்ள கடன்களையும் அடைக்க வேண்டும்.

கடனை அடைப்பதற்கு இன்றிலிருந்து 25 ஆண்டுகள் வரை செல்லும். அதாவது 2048 இல், இலங்கை சுதந்திரம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் இலங்கை சுபீட்சமான நாடாக உருவாக முடியும். அச்சமயத்தில் நம்மில் பலர் உயிருடன் இருக்கமாட்டோம். ஆனால், அதற்குப் பங்களித்தவர்களாக இருப்போம்.

அரசியல் செயற்பாடுகளில் இளைய தலைமுறையினரின் கருத்துக்களை எப்படி உள்வாங்குவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

உங்களுக்கு ஜனநாயகம் வேண்டும் என்றால் நிலையான ஆட்சி, ஒழுக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன இருக்க வேண்டும்.

வீடுகளை எரிப்பதா அல்லது அலுவலகங்களைக் கைப்பற்றுவதா என்பதை நீங்கள் தீர்மானிக்க முடியாது. அது ஜனநாயகம் அல்ல. ஜனநாயகம் என்பது சட்டத்தின் ஆட்சியின் கீழ் செயற்படுவதாகும்.

இலங்கையில் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சில தரப்பினர் வன்முறையில் ஈடுபட்டனர். நாம் அவர்களின் கருத்துக்களைக் கண்காணிப்புக் குழுக்களில் சேர்த்துள்ளோம். நாடாளுமன்றத்தில் 19 கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. அவற்றில் ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்க இருக்கின்றோம். வேறு எந்த நாடும் அவ்வாறு செய்தது கிடையாது.

கண்காணிப்புக் குழுவால் அனுப்பப்படும் எந்த அறிக்கைக்களுடனும் மேலதிக ஆவணமாக இளைஞர்களின் கருத்துக்களை சமர்ப்பிக்கலாம். எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு அவர்களின் தேவைகளின் பிரகாரம் நாட்டை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். அவர்களை இணைத்துக் கொள்ளக் கூடிய பல்வேறு வழிகளைக் கண்டறிய வேண்டும்.

கரு ஜயசூரிய மற்றும் விக்டர் ஐவன் ஆகியோர் கிராம சேவகர் மட்டத்தில் மக்கள் சபைகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் தமிழ் மக்களின் காணிப் பிரச்சினை, காணாமல்போனவர்கள் தொடர்பான பிரச்சினை, அவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை என்பவற்றுக்குத் தீர்வு வழங்க வேண்டும். அதிகாரப் பகிர்வின் சில அடிப்படைகளைக் கவனிக்க வேண்டும்.

2018ஆம் ஆண்டு அரசமைப்பைத் திருத்த நாம் நடவடிக்கை எடுத்தபோது வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள ஏழு முதலமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் யோசனைகளை முன்வைத்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், முதலமைச்சர்களும் அதற்கு உடன்பட்டுள்ளதால் எமக்கு அதனைத் தொடர முடியும். அதனை நிறைவேற்ற முடியும் என்றும் நம்புகின்றேன்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து வளமான தேசமாக எமது நாட்டை மாற்ற வேண்டும். இங்கே வாழ்வதால் நீங்கள் வெற்றி அடைந்திருப்பீர்கள்.

இங்கு வாழும் சுமார் 5 இலட்சம் இலங்கையர்கள், தங்களை முதல் அல்லது இரண்டாம் தலைமுறை இலங்கையர்களாக அடையாளப்படுத்துகின்றனர். வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள், புலம்பெயர் மக்களாக அழைக்கப்படுகின்றனர். புலம்பெயர் அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பணி முன்னெடுக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சு அதைச் செயற்படுத்தி வருகின்றது. அது ஜனாதிபதியின் அலுவலகத்தின் கீழ் இருக்கும். சில காலங்களின் பின்னர் அது வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும். ஆனால், இந்த அலுவலகம் வெற்றிபெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். நாம் அனைவரும் இதில் கைகோர்க்க வேண்டும்.

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் முதலீடு செய்ய முடியும். உங்களில் சிலருக்கு தெற்கு அல்லது கிழக்கில் தொடர்புகள் இருக்கலாம். அவர்களுக்கு உதவியளிக்க விரும்பலாம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உங்களால் முடிந்த விதத்தில் இலங்கைக்கு உதவுங்கள் – என்றார்.

ஐக்கிய இராச்சியத்துக்குத் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதியின் ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான ருவன் விஜேவர்தன, முதற் பெண்மணி சிரேஷ்ட பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# மாபியாக்களைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கை!

## வியாழேந்திரன் உத்தரவாதம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் மாபியாக்களை கட்டுப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வர்த்தக, வாணிபத்துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கும் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு வர்த்தக விவசாய கைத்தொழில் சம்மேளன அலுவலகத்தில் விவசாய துறைக்கான தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் வர்த்தக,வாணிபத்துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையை முன்னெடுப்பதற்குத் தேவையான உள்ளீடுகள் கிடைக்கப்பெறும் வரையில் நெற்செய்கையில் ஈடுபடப்போவதில்லையென விவசாயிகள் அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் சிறுபோக அறுவடையின்போது பெறப்பட்ட நெல்லுக்கு இதுவரையில் சிறந்த விலை கிடைக்காமை, நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்கு இதுவரை பணம் வழங்காமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் –

சேதனப் பசளைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கம் கூறிய போது எமது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பல சவால்களுக்கு மத்தியில் தங்களுடைய முழு உழைப்பையும் தியாகம் செய்து, அதனை நடைமுறைப்படுத்தினார்கள். இந்நிலையில் செய்கையின் போது நட்டம் ஏற்பட்டால் ஏக்கருக்கு 40 ஆயிரம் நஷ்டஈடு தருவதாகக் கூறப்பட்டது.

ஆனால் அந்த நஷ்டஈட்டை அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் அடுத்தடுத்து, இரண்டு போகங்களைச் செய்து, மிகப் பெரிய சிரமங்களுக்கு உள்ளான நிலையில் எமது விவசாயிகள் தற்போது பெரும் போகத்துக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட சிறு போகத்திலும் விவசாயிகளுக்கென விநியோகிக்கவென கொண்டு வரப்பட்ட 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 258 மெற்றிக் தொன் யூரியாதான் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் இங்கையின் நெல் உற்பத்தியில் முதல் நான்கு இடத்தில் இருக்கின்ற மிக முக்கியமான மாவட்டமாகவும், விவசாயத்தை சுமார் 80 வீதம் நம்பியிருக்கின்ற மாவட்டமாகவும் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் மாவட்ட விவசாயிகள் மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள்,மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் மற்றும் நிர்வாகத்தினர் எந்த அரசியல் வேறுபாடுகளும் இல்லாமல், அரசியலுக்கப்பால் இந்த மாவட்டத்தின் நலன் கருதியும், இந்த நாட்டின் நலன் கருதியும் பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களை அவர்கள் கடந்த சில நாள்களாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பது மாத்திரமல்லாமல், சமயத் தலைவர்கள், துறைசார்ந்தவர்கள் மற்றும் திணைக்களம் சார்ந்த அதிகாரிகளோடும் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டு தமது பிரச்சினைகள் மற்றும் உடனடித் தேவைகளை எடுத்துக் கூறிவருகின்றனர்.

இந்த அடிப்படையில் தற்போது அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருக்கிறது. எது எவ்வாறிருப்பினும் இந்த விவசாயிகளுக்கு தற்போது செய்கையை மேற்கொள்ள 8 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இது விடயமாக நான் இப்போது மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் விவசாய அமைச்சின் செயலாளரோடு தொலைபேசியில் உரையாடினேன்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாய அமைச்சின் செயலாளர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகின்ற 23 ஆம் திகதிக்குள் 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் யூறியா தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் 8 ஆயிரம் மெற்றிக் தொன் எமக்குத் தேவைப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் விவசாய பிரதிநிதிகள் தற்போதைக்கு 5 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா தந்தால் ஒருவாறு சமாளிப்போம். அடுத்த ஓரிரு வாரங்களில் மீதியையும் தர வேண்டுமென்றனர். இவ்வாறு கிடைக்கும் பட்சத்தில்தான் 2 லட்சம் ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும். கடந்த காலத்தில் இரண்டு போகங்களும் யூரியா இல்லாததால் கஷ்டப்பட்டோம். தற்போது அது கிடைத்தால்தான் சிறப்பாக நெற் செய்கையை மேற்கொள்ள முடியும் என்ற மனோபாவத்தில் உள்ளனர்.

இவற்றோடு டீசல் பிரச்சினை, நஷ்ட ஈட்டு பிரச்சினை, யானைப் பிரச்சினை போன்றவை தொடர்பாகவும் பேசப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் விவசாய அமைச்சின் செயலாளரோடு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாகப் பேசவுள்ளேன். முடிந்தால் விவசாய அமைச்சரையும் சந்தித்து குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் எடுத்துரைப்பேன். மேலும் இந்தமாத இறுதிக்குள் விவசாய அமைச்சர் இங்கு வருவதாகக் கூறியுள்ளார்.

அத்தோடு தாம் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வாய்ப்புதரப்பட வேண்டுமென விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களோடு கலந்துரையாடி நிட்சயம் கலந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்திருக்கிறேன்.

கடந்த காலங்களில் யூரியாவை பல்வேறு மாபியாக்கள் 48 ஆயிரம் அதை விட அதிகமாகவும் விற்பனை செய்துள்ளனர். இந்நிலையில் அவ்வாறான சூழல் ஏற்படாதவாறு, 20 ஆயிரம் ரூபாவுக்குள் யூரியா நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்கப்பட வேண்டும். இதற்கு மேல் விற்றால் அவர்களால் ஈடுகொடுக்க முடியாது.

எனவே விவசாயிகளின் கோரிக்கைகளை முடிந்த வரை பேசித் தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன். – என்றார்.



## பிரபாகரனின் வீட்டு காணியில் சிவாஜிலிங்கம் சிரமதான பணி!

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் வீடு அமைந்திருந்த காணியை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தலைமையில் ஊர் மக்கள் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டுக் காணிக்கு வல்வெட்டித்துறை நகர சபையால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டுள்ளது.

காணியில் இருந்த வீடு முற்றாக அடித்து அழிக்கப்பட்ட நிலையில் காணி பராமரிப்பின்றி கைவிடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் பற்றைகள் வளர்ந்துள்ளன.

பற்றைகளினால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டி, குறித்த காணியினை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும் எனவும் இல்லாவிடின் குறித்த ஆதனத்தை நகர சபை கையகப்படுத்தும் என அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் சிவாஜிலிங்கம் தலைமையில் ஊரவர்கள் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் காணியில் துப்புரவு பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

## அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவதாக சர்வதேசத்தை நம்பவைப்பதற்காகவே தேசிய பேரவை

### அநுரகுமார திஸாநாயக்க சாடல்



பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் உண்மையான நோக்கத்துடன் தேசிய பேரவை கொண்டு வரப்படவில்லை என்றும் அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவதாக சர்வதேச சமூகத்தை நம்பவைப்பதற்காகவே இந்தத் தேசிய பேரவை கொண்டு வரப்பட்டது என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அப்படிப்பட்ட பேரவையில் சேர்வதால் எந்தப் பலனும் இல்லை என்றும் அதனால் தாங்கள் அதில் தலையிட மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற தேசிய பேரவையை ஸ்தாபித்தல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்க்கட்சிகளை தேசிய பேரவையில் இணையுமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால் கோப் மற்றும் கோபா குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க அரசாங்கம் மறுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு மத்தியிலும் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் மறுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் அரசாங்கத்தில் மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன எனப் பல அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன எனவும் இந்த அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். இந்துக் கல்லூரியில் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஒரு துளி உயிர் தரும்!' எனும் தொனிப் பொருளில் குருதிக் கொடை முகாம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக் கொடைமுகாமில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்துகொண்டு உயிர்காக்கும் உன்னத பணியில் பங்காளர்களாக இணைந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத்தினர் அழைத்து நிற்கின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2022இல் வெளியிடப்பெற்றது.